දුරකථන
தொலைபேசி
Telephones } 011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary } 011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax } 011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail } info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website } www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
**அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்**
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය
எனது இல.
My No. } PSC/DIS/01/06/2020

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2023.09.

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் :- 03/2023

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,

<u>குற்றவியல் தவறொன்றைப் புரிந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் அரச உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கையில் குறித்த நிகழ்வுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை</u>

அரச உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதேனுமொரு குற்றவியல் தவறொன்று புரியப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பத்தில், குறித்த நிகழ்வுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள், பொலிஸ் திணைக்களம் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் கையேற்கப்படும் அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அத்தகையதொரு சூழ்நிலையில் குறித்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதன் பொருட்டு ஏற்புடைய அமைச்சு செயலாளர்/திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் அறிக்கையிடப்பட்டாலும், அது தொடர்பில் மேல் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஆவணங்களின் மூலப் பிரதிகள்/முறைப்படி உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதில்லை. எனவே, ஏற்புடைய ஒழுக்காற்று நடவடிக்கையை விளைத்திறன் மிக்கதாகவும் வினைத்திறனுடையதாகவும் மேற்கொள்வதற்குக் குறித்த நிலைமை தடையாக உள்ளமை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டது.

02. அதற்கமைய மேற்குறித்த சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களிடம் கையளிப்பதற்கு முன்னர் குறித்த ஆவணங்களுக்குப் பொறுப்பாகவுள்ள நிறுவனத் தலைவர் அவற்றை முறைப்படி உறுதிப்படுத்தி, பிரதிகளைத் தன்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும். இது தொடர்பிலான ஏற்பாடுகள் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27:6 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், குறித்த ஏற்பாடுகள் மீது தங்களது கவனத்தை மேலும் ஈர்க்க விரும்புகிறேன்.

03. மேலும், ஏற்புடைய பொலிஸ் உத்தியோகத்தரினால் அல்லது புலனாய்வு உத்தியோகத்தரினால் குறித்த மூலப் பிரதிகள் கையேற்கப்பட்டமையை உறுதி செய்து அவரது ஒப்பத்தையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு